Utdanningsdirektoratet

# Eksamen

26.05.2009

PSP5311 / VT6230 TAMIL

Privatistar / Privatister

Nynorsk/Bokmål

## Nynorsk

| Eksamensinformasjon | |
|---|---|
| **Eksamenstid:** | 5 timar |
| **Hjelpemiddel:** | Alle hjelpemiddel er tillatne. Unntak er Internett og andre verktøy som tillet kommunikasjon.<br>For framandspråka er heller ikkje omsetjingsprogram tillatne. |
| **Bruk av kjelder:** | Alle kjelder som blir nytta til eksamen, skal førast opp på ein slik måte at lesaren kan finne fram til kjelda. Du må føre opp forfattar og heile tittelen både på lærebøker og annan litteratur.<br><br>Dersom du har med deg utskrift eller sitat frå nettsider, skal heile adressa og dato for nedlastinga førast opp. Det er til dømes ikkje tilstrekkeleg med www.wikipedia.no |
| **Informasjon om oppgåva:** | Du skal svare på alle dei fire oppgåvene i oppgåvesettet.<br>I oppgåve 1 skal du lese teksten godt og svare på spørsmåla<br>I oppgåve 2 skal du skrive eit brev der du forklarer dykk om kvifor du ønskjer å hjelpe fattige barn.<br>I oppgåve 3 skal du skrive ein kort tekst om forskjellen til fattigdomen mellom den tredje verda og Noreg.<br>I oppgåve 4 skal du skildre korleis du kan planleggje og samarbeide med dei andre gruppemedlemene.<br>Når svara skal vurderast er det heilskapen i oppgåvesvaret som tel.<br>Dersom du er i tvil, kan du bruke norske ord. Men dei oppgåvene der du svarer på tamilsk tel meir. |
| **Kjelder:** | |

## Oppgave 1
**வினா 1.**

Les teksten og svar på spørsmålene på neste side.

உங்களுக்கு தரப்பட்ட உரையை வாசித்து மறுபக்கத்தில் தரபட்ட வினாக்களுக்கு விடை எழுதுக.

### வறுமை (Fattigdom)

வறுமை எல்லா சமுதாயத்திலும் காணப்படுகின்றது. அது அவர்கள் வாழும் இடத்தின் சமூக, பொருளாதார,அரசியல் அமைப்புகள் காரணமாக ஏற்படுகின்றது. பொதுவாக வறுமை என்றால் என்ன என்று திட்டவட்டமாக வரையறுக்கப்பட்ட ஆதாரங்கள் இல்லை என்றே கூறலாம். ஆனால் விகிபிடியா நிறுவனம்( Wikipedia org) வறுமைக்கான வரைவிலக்கணத்தை பின்வருமாறு வரையறுத்துள்ளது:

- வாழ்கை வாழ்வதற்கு குறைந்தபட்ச தேவைகளின் (minimale krav) பற்றாக்குறை. இந்த குறைந்தபட்ச தேவை என்பது அவர்களின் வாழ்விடத்தையும், காலத்தையும் பொறுத்தே அமைகின்றது.
- வறுமை என்னும் சொல்லின் பதம் (begrepet) தனிப்பட்ட மனிதர்களையோ அல்லது ஒரு குழுவினரையோ குறிப்பிடாமல் அவர்கள் வாழும் நாடு, அரசியல் நிர்வாகம் போன்றவற்றைக் கொண்டே கணிக்கப்படுகின்றது.

வறுமைக்கு பல காரணங்கள் உண்டு. ஆனால் குறிப்பாக இரண்டு காரணங்கள் முக்கிய கவனத்தில் கொள்ளப்படுகின்றது. ஒன்று பொருளாதார வசதியின்மையால் ஏற்படும் வறுமை (økonomiske fattigdom) மற்றையது சமூக அமைப்பினால் ஏற்படுத்தப்படும் வறுமை (sosiale fattigdom). அதாவது ஒரு சமூகத்தில் ஏற்படும் ஏற்றத்தாழ்வு நிலையைக்குறிக்கும். வறுமையில் வாழ்பவர்கள் தமது வாழ்கையை எப்படி வாழவேண்டும் என நிர்ணயிக்க முடியாது.

வறுமை எல்லைக்கோட்டைக் கொண்டு வறுமையை அளவிடமுடியும். வறுமை எல்லைக்கோட்டிற்கு கீழ்நிலையில் உள்ளவர்கள் பூரணமான வறுமையுடையவர்கள் (absolutt fattigdom) எனவும், வறுமை எல்லைக்கோட்டிற்கு அண்மையாக இருப்பவர்கள் வறுமையை அண்மித்தவர்கள் (relativ fattigdom) எனவும் கணிக்கப்படுகின்றது.

பூரணமான வறுமை(absolutt fattigdom) என்பது மனிதனுக்கு வேண்டிய அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, வசிப்பிடம், அடிப்படைக்கல்வி, சுகாதாரசேவை என்பனவற்றை பெற்றுக் கொள்வதற்கு போதுமான வளங்கள் அற்றவர்கள். இப்படியான நிலையில் உள்ளவர்கள் வாழ்கையை சிரமப்பட்டு வாழ்வதால் தமது வாழ்கையில் எந்தவித மாற்றத்தையும் செய்ய முடியாதவர்களாக இருக்கின்றார்கள். 2005 ம் ஆண்டு உலகில் இவர்களின் தொகை ஏறத்தாள 20 விகிதம் என கணித்துள்ளார்கள்.

வறுமையின் எல்லைக்கோட்டிற்கு அண்மையாக வாழ்பவர்கள் (relativ fattigdom) அடிப்படைத் தேவைகளை ஓரளவிற்கு பெற்றுக்கொள்கின்றார்கள். ஆனால் இவர்கள் தமது சமுதாயத்தில் வாழும் மற்றவர்கள் போல் நல்ல வாழ்கைத்தரத்துடன் வாழ முடியாத தன்மை உள்ளவர்களாக இருக்கின்றார்கள். உதாரணமாக அவர்கள் வாழும் சமுதாயத்தில் அவர்களின் வாழ்கைத்தரம் ஒப்பீட்டுரீதியில் தாழ்ந்து காணப்படுகின்றது. அதாவது அவர்களுடைய அடிப்படைத் தேவைகளைமட்டும் பார்க்காமல், அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் சமுதாயத்தினரின் வாழ்க்கைத் தராதரத்தை ஒப்பிட்டு பார்க்கும் போது வாழ்க்கைத்தரம் குறைந்தே காணப்படும். (http://no.wikipedia.org/wiki/fattigdom)

Skriv svarene på tamilsk

e) Hvilke sammenhenger kan vi se på fattigdom?
f) Hva er definisjon av fattigdom?
g) Er det viktig å vite fattigdomsgrensen når man måler fattigdom? Skriv forklaringen din i et kort avsnitt.
h) Hva forstår du med absolutt fattigdom?

வினாக்களுக்கு விடைத் தமிழில் எழுதுக.

e) வறுமை எவற்றுடன் சம்பந்தப்பட்டதாக இருக்கின்றது?
f) வறுமையின் வரைவிலக்கணம் யாது?
g) வறுமையை அளவிட வறுமைக்கோட்டு எல்லை அவசியமா? உங்கள் கருத்தை சுருக்கமாக எழுதுக.
h) பூரணமான வறுமை பற்றி நீங்கள் என்ன விளங்கிக் கொள்கின்றீர்கள்?

## Oppgave 2
**வினா 2**

Du ønsker å hjelpe fattige barn som bor i den tredje verden via Røde Kors organisasjonen. Skriv et brev til dem om hva slag hjelp du ønsker å gi til de fattige barna.

வறுமையில் வாடும் மூன்றாம் உலக நாடுகளில் உள்ள வசதியற்ற குழைந்தைகளுக்கு செஞ்சிலுவைச் அமைப்பினருடன் தொடர்பு கொண்டு உதவி செய்ய விரும்புவதாக கற்பனை செய்து. செஞ்சிலுவை அமைப்பினருக்கு நீங்கள் எவ்வாறான உதவிகள் செய்ய விரும்புகின்றீகள் என்பதைக் ஒரு கடிதமாக எழுதுக.

## Oppgave 3.
**வினா 3.**

Mange utviklingslands befolkninger lever under fattigdomgrensen. Men Norges nåværende rød-grønne regjering ønsker å hjelpe fattige i Norge. Hva er fattigdoms forskjellen mellom utviklingsland og Norge?

பல வளர்ந்து வரும் நாடுகளில் மக்கள் அடிப்படை வசதியற்று வறுமையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். ஆனால் நோர்வேயில் தற்போதுள்ள ஆளும் கட்சியினர் நோர்வேயில் உள்ள வறியவர்களில் கூடிய கவனம் செலுத்த வேண்டும் என்ற அரசியற் கொள்கையைக் கடைப்பிடிப்பதாக கூறிவருகின்றார்கள். நோர்வேயிலுள்ள வறுமைக்கும் வளர்ந்துவரும் நாடுகளில் உள்ள வறுமைக்கும் உள்ள வித்தியாசங்கள் எவை?

## Oppgave 4.
**வினா 4**

Din skole har bestemt at i dette skoleåret skal barna gi støtte til et skolebarn som lever under fattigdomsgrensen i et utviklingsland. Du har fått i oppgave å organisere dette, men du får hjelp fra en lærer og to elever. Skriv hvilket land du ønsker å velge og hvordan du vil organisere oppgaven din.

இவ்வருடம் உங்கள் பாடசாலை ஒரு வளர்ந்து வரும்நாட்டில் வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் பாடசாலைச் சிறுவர் ஒருவருக்கு உதவி செய்ய தீர்மானித்துள்ளது. அதற்கான வேலைகளைச் செய்யும் பொறுப்பை உங்களிடம் ஒப்படைத்துள்ளார்கள். உங்களுடன் சேர்ந்து செயற்பட இரண்டு மாணவர்களையும் ஒரு ஆசிரியரையும் நியமித்துள்ளார்கள். நீங்கள் எந்நாட்டிற்கு உதவிசெய்ய விரும்புகின்றீர்கள் என்றும் எவ்வாறு திட்டமிட்டு செயற்படுவீர்கள் என்றும் சுருக்கமாக எழுதுக.